வகுப்பு - 9

பாடம் : தமிழ்

## ஏறுதழுவுதல்

## இயல் - 3

### பாடம் 1 : ஏறுதழுவுதல்

#### குறுவினா

**1. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?**

ஜ(ச)ல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு ஏறுதழுவுதல், காளைவிரட்டு, மாடு பிடித்தல் , எருதுகட்டி, ஏறுவிடுதல் எனப்பல்வேறு வடிவங்களில் ஏறுதழுவுதல் அழைக்கப்படுகிறது.

**2. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக**

முல்லைக்கலியில், ஏறுதழுவுதல் என்னும் சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களில் 'ஏறுகோள்' என்றும் கண்ணுடையம்மன் பள்ளு என்ற சிற்றிலக்கியத்தில் 'எருதுகட்டி' என ஏறுதழுவுதல் பற்றி குறிக்கப் பெற்றுள்ளன.

#### சிறுவினா

**1. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையான நீட்சியை விளக்குக**

ஏறுதழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும், மருதநிலத்து வேளாண்குடிகளின் தொழில் உற்பத்தியோடும் பாலைநிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத்தொழிலோடும் பிணைந்தது. இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையமாக நீட்சி அடைந்தது.

**2. ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?**

தமிழக உழவர்கள், தங்களின் உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப்பெரிதும் துணைநின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப் பொங்கல். அவ்விழாவின்போது மாடுகளைக் குளிப்பாட்டி, பல வண்ணங்களில் பொட்டிட்டு மூக்கணாங்கயிறு, கழுத்துக்கயிறு, பிடிகயிறு அனைத்தையும் புதிதாக அணிவிப்பர். கொம்புகளைப் பிசிறு சீவி, எண்ணெய் தடவி, கழுத்து மணியாரம் கட்டி வெள்ளை வேட்டியோ துண்டோ கழுத்தில் கட்டுவர். பின்னர் பூமாலை அணிவித்துப் பொங்கலிட்டுத் தம்மோடு உழைப்பில் ஈடுபட்ட மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தளிகைப்பொங்கலை ஊட்டி விடுவர். இதன் தொடர்ச்சியாக வேளாண் குடிகளின் வாழ்வோடும், உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக் கொண்டதே ஏறுதழுவுதலாகும்.

## பாடம் 2 : மணிமேகலை

### குறுவினா

1. **பழமணல் மாற்றுமின், புது மணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக**

**இடம்** : கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெற்றிருக்கிறது இத்தொடர்.

**பொருள்** : விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புது மணலைப் பரப்புங்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

**விளக்கம்** : மணிமேகலைக் காப்பியத்தில் முப்பது காதைகளுள் முதல் காதையாக விளங்குவது விழாவறை காதை ஆகும். புகார் நகரில் இருபத்தெட்டு நாள் நடைபெறக்கூடிய இந்திரவிழா தொடங்க உள்ளது. இந்த அறிவிப்பை யானை மீதுஅமர்ந்து முரசறைவோன் அறிவித்தான். விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள் என்று அறிவிக்கிறான்.

2. பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.

பட்டிமண்டபம் என்பது இலக்கிய வழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சு வழக்கும் ஏற்றுக்கொள்ளப்படுகிது.

''மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன்''

பகைப் புறநத்துக் கொடுத்த பட்டிமண்டபம் எனச் சிலப்பதிகாரத்திலும்,

''பட்டி மண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்'' என மணிமேகலையிலும்

''பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை;

எட்டினோடு இரண்டும் அறியனையே'' என்று திருவாசகத்திலும்

''பன்னரும் கலை தெரி பட்டிமண்டபம்'' எனக் கம்பராமாயணத்திலும்

இச்சொல் பயின்றுவருதலை அறியலாம்.

Next Generation School

## சிறுவினா

1. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

| வ.எண் | உள்ளூர் விழா | இந்திர விழா |
|---|---|---|
| 1. | ஊர் நாட்டாண்மை, மணியம் ஊர்ப்பெரியோர், கோயில் குருக்கள், முதியோர், இளைஞர்கள் எல்லோரும் ஒருங்கே கூடி கோயில் முன்பாக அமர்ந்தனர். | புகார் நகரில் இந்திரவிழா நடைபெறுவது குறித்து முரசறைவோன் நான்கு வகைப் படைகளும் சூழ அகன்ற முரசறைந்து “பசியும் பிணியும்பகையும் நீங்கி வசியும்’ வளனும் சுரக்க” அறிவித்தான். அயல்நாட்டினரும் அரசர், அமைச்சர் ஐம்பெருங்குழு எண்பேராயம் அவையில் திரண்டிருந்தனர். |
| 2. | ஊர்த்திருவிழாவிற்கு நாள் குறித்தவுடன் ஊர் சாட்டல், ஊர் நுவைாயிலிலே வேப்பிலை, மாவிலைத் தோரணங்கள் கட்டுதல், வீடுகளுக்குச் சுண்ணாம்பு பூசுதல் ஆகிய முன்னேற்பாடான ஆயத்தப் பணிகள் செய்தனர். | தோரணம்கட்டிய தெருக்கள், மன்றங்களில் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மங்கலப்பொருள்கள் அழகுபடுத்தி வைக்கப்பட்டன. பாக்கு மரம், வாழைமரம், வஞ்சிக்கொடி, கரும்புகளையும் நட்டு வைத்தனர். தங்கத்தூண்களில் முத்துமாலைகள் தொங்கவிட்டனர். |
| 3. | ஊரவர் வேறுபாடின்றி ஒற்றுமையாக பட்டிமன்ற நிகழ்ச்சி வழியாக சமூகப் பிரச்சனைகளை விவாதித்து தீர்வு கண்டனர். துமிழகத்தின் பாரம்பரியக் கலைகளான தெருக்கூத்து, கரகாட்டம், பொய்கால் நிகழ்ச்சிகள் நடத்தினர். | பட்டிமண்டபம் ஏறுமின்<br>ஊர் மன்றங்களில் அவரவர் சமயத்திற்கு உரிய பொருளை வாதிட்டுத்தீர்வு கண்டனர் |
| 4. | உறவினர்களையும் விருந்தினர்களையும் அழைத்து திருவிழா நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளச் செய்தனர் | கருத்து மாறுபாடு கொண்ட பகைவர்களிடம் கோபமும் பூசலும் கொள்ளாது தேவரும்மக்களும் ஒன்றுபட்டு இருபத்தெட்டு நாள்களிலும் உலவி வந்தனர். |

Next Generation School

# பாடம் 3 : அகழாய்வுகள்

## குறுவினா

**1. தொல்லியல் ஆதாரங்கள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்யவேண்டும். ஏன்?**

தொல்லியல், அகழாய்வு செய்தல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியல் செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். அகழாய்வு வரலாறு முழுமை பெற உதவுகிறது.

அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமின்றி நம் வரலாற்றையும் உணர்த்துகின்றன.

## சிறுவினா

**1. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்துரைக்க**

அறிவியல் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய தலைமுறையைப் பற்றித் தெரிந்து என் செய்வது, செல்லிடப்பேசிகளுக்குள்ளே உலகம் சுற்றும் வேளையில் அகழாய்வில் கிடைக்கும் செல்லாக் காசுகள் வந்தென்ன செய்யமுடியும்? மடிக்கணினி மலைக்க வைக்கிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு மண் ஓடுகள்இறந்தோரைச் சுமந்த மண் தாழிகள் கண்டறிந்து என்ன சாதிக்கமுடியும்.? இவ்வாறு இருக்க அகழாய்வு என்ன செய்ய இருக்கிறது?

அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன.அதனால் ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.

ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல் அழப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

Next Generation School